# தமிழ்நாட்டில் சமூகநீதி வரலாறு

- ஒரு பார்வை

■ கி.வீரமணி



# தமிழ்நாட்டில் சமூகநீதி வரலாறு

## - ஒரு பார்வை

**கி.வீரமணி**

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தமிழ்நாட்டில் சமூகநீதி வரலாறு - ஒரு பார்வை |
| ஆசிரியர் | : | கி.வீரமணி |
| பதிப்பு | : | முதற்பதிப்பு : மே, 2018<br>இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 2019 |
| பக்கங்கள் | : | 32 |
| கட்டமைப்பு | : | சாதாரணம் |
| நன்கொடை<br>(குறைந்த அளவு) | : | ரூ.20/- |
| வெளியீடு மற்றும்<br>உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815 |

# தமிழ்நாட்டில் சமூகநீதி வரலாறு - ஒரு பார்வை

‘சமூகநீதி’ என்பது நமது (இந்திய) அரசமைப்புச் சட்டத்தின் “பீடிகையில்” இடம்பெற்றுள்ள முக்கிய கோட்பாடு ஆகும்.

மக்கள் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்யும் நீதி வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதில் முதலில் சமூகநீதி, அடுத்துதான் பொருளாதார நீதி, அரசியல் நீதி என்று முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

ஏன் சமூகநீதி கோரிக்கை ஏற்பட்டது? தேவை என்ன? சமூக அநீதி காலங்காலமாக நிலவி வந்தது. உலகில் எங்குமில்லாத ஜாதி முறை வர்ணாசிரமத்தால் படிப்பு உயர்ஜாதியினருக்கே; உழைப்பு கீழ்ஜாதியினருக்கே என்ற மனுநீதிதான் அரசர்கள் காலம்முதல் கடைப்பிடிக்கப்பட்டதாக இருந்தது. இதை எதிர்த்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சமூகநீதி கல்வி வேலைவாய்ப்பு கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கை முழக்கமாகி, அது 1916 முதல் பழைய சென்னை மாகாணத்தில் இயக்கமாகியது!

அவ்வியக்கத் தலைவர்கள் நீதிக்கட்சி டாக்டர் சி.நடேசனார், சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் போன்றவர்களின் முயற்சியால் அது அரசியல் கட்சியாகி, ஆளும் அரசாகவும் ஆன நிலையில், பல்வேறு காலகட்டங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

அப்போது தமிழ்நாடு காங்கிரசு தலைவராக இருந்த தந்தை பெரியார், காங்கிரசு மாநாடுகளில் இதனைத் தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்றிட செய்த முயற்சி செல்வாக்குள்ள உயர்ஜாதியினரால், 1920 முதல் 1925 வரை தொடர்ந்து தோற்கடிக்கப்பட்டது. அதன் காரணமாக, 1925 இல் தந்தை பெரியார் காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில் கட்சியை விட்டு வெளியேறினார்.

தனியே சமூகநீதியை நிலைநாட்ட 1925 ஆம் ஆண்டு இறுதியில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவி, சமூக நீதியின் முழக்கமாக ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்ற கொள்கையை அடிநாதமாக்கினார்.

நீதிக்கட்சியில் சேராத காலத்திலும்கூட, அதே கொள்கையை வற்புறுத்தி “சென்னை மாகாண சங்கத்தில்” பொறுப்பேற்று வலியுறுத்தியே வந்தார்.

1928 இல் வகுப்பு வாரி உரிமை ஆணையை நீதிக்கட்சியின் ஆதரவுடன் ஆண்ட டாக்டர் சுப்பராயன் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள்மூலம் ஆணை பிறப்பிக்கச் செய்து, அதை வரவேற்றார்.

அதன்படி, அரசு ஆணை (எண் 1129, நாள்:15.12.1928) அமலில் அன்றிருந்த சமூகநீதி அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது.

1950இல் அமலுக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைப் பிரிவுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி, இவ்வாணை ‘சமத்துவத்திற்கு’ எதிரானது என்று கூறி, சென்னை உயர் நீதிமன்றத்தில் உயர்ஜாதியினர் போட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் அமர்வு மற்றும் உச்சநீதிமன்றமும் அதை உறுதிசெய்து அறிவித்த நிலையில், இதற்கான பெரியதொரு மக்கள் கிளர்ச்சியை தந்தை பெரியார் முன்னின்று நடத்தினார். இதனை அறிந்த பிரதமர் நேரு, சட்ட அமைச்சர் அம்பேத்கர் ஆகியோர் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முதலாவது சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் 1951இல் நிறைவேற்றினர்.

அதன்மூலம் சமூகநீதி, உயர்நீதிமன்ற, உச்சநீதி மன்ற தீர்ப்புகளால் ஏற்பட்ட ஆபத்துகளிலிருந்து காப்பாற்றப்பட்டது.

இதில் சென்னை மாகாணத்தில் அவ்வப்போது வகுப்புவாரி உரிமை ஆணையில் பற்பல மாற்றங்கள் பரிமாண வளர்ச்சியாக உருவெடுத்தன.

எடுத்துக்காட்டாக, ஓமந்தூர் ஓபி.இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதற்குமுன் இடம்பெறாத பிற்படுத்தப்பட்ட (Backward) என்ற சொல் அவ்வாணையில் இடம் பெற்றது சட்டத் தேவையை ஒட்டி, அது கல்வி வள்ளல் காமராசர் முதல்வர் ஆன காலத்தில், “தாழ்த்தப்பட்டவர்” இணைந்து மலைவாழ் மக்கள், என்ற

பிரிவுகளின் கீழ் முறையே 16 விழுக்காடு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 விழுக்காடு என 41 விழுக்காடு இடஒதுக்கீடு என்று ஆணை செயற்பாட்டிற்கு வந்தது.

1967 இல் அறிஞர் அண்ணா ஆட்சி அமைத்து, பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு தந்தை பெரியார் வற்புறுத்தலால், போடப்பட்டு, அந்தக் குழு தன் பரிந்துரையை கலைஞர் (மு.கருணாநிதி) அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் அளித்தது. அதனை ஏற்று, கலைஞர் அரசு, அவ்வாணையை, தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு இருந்த 16 சதவிகிதத்தை 18 ஆக உயர்த்தியது.

பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதமாக இருந்ததை 31 சதவிகிதமாக உயர்த்தியது.

எஞ்சிய 51 சதவிகிதம் முன்னேறிய வகுப்பினர் உள்பட அனைவரும் போட்டியிடும் பொதுப் போட்டிக்கானது.

1979 இல் அ.தி.மு.க. சார்பில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்டு வருமானம் 9,000 ரூபாய் இருந்தால் அவர்கள் பிற்படுத்தப் பட்டவர்களாக இருக்க முடியாது என்ற "வருமான வரம்பு ஆணை"யைப் போட்டார்.

இது அரசமைப்புச் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் எதிரானது என்று திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஜனதாவில் சில தலைவர்கள் குறிப்பாக ரமணிபாய், காங்கிரசில் டி.என்.அனந்தநாயகி, திண்டிவனம் இராமமூர்த்தி, மணிவர்மா போன்றோர் எதிர்த்தனர். அதன் பிறகு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. படுதோல்வியை சந்தித்தது. 39 இடங்களில் 2 இடங்களில் தான் வெற்றி பெற்றது.

இத்தோல்வி, திராவிடர் கழகத்தின் தலைமையில் நடந்த பிரச்சாரம், கிளர்ச்சி எல்லாம் எம்.ஜி.ஆர். அவர்களை மறுசிந்தனைக்கு உள்ளாக்கியது.

அதனால் அவர், ரூ.9,000 வருமான வரம்பு ஆணையை ரத்து செய்ததோடு, பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கிய 31 சதவிகிதத்தை 50

சதவிகிதமாக உயர்த்தினார். அதன்படி, இட ஒதுக்கீடு 68 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. மலைவாழ் மக்களுக்குத் தனி ஒதுக்கீடு, பிறகு வந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பால் தி.மு.க. ஆட்சியில் ஒரு சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. 68 சதவிகிதம் 69 சதவிகிதமாக உயர்ந்தது.

இதற்கிடையில், மத்திய அரசு கல்வி, உத்தியோகத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு இல்லை என்றிருந்த நிலையில், அரசமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்ட காகாகலேல்கர் முதல் பிற்படுத்தப்பட்டோர் குழுவின் பரிந்துரைகள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமலேயே முடக்கப்பட்டது.

இரண்டாவது குழு பி.பி.மண்டல் தலைமையில் அமைக்கப்பட்டு (1980), அந்தக் கமிஷன் பரிந்துரை அளித்தது. திராவிடர் கழகம், தி.மு.க. மற்ற சமூகநீதி அமைப்புகள் எல்லாம் சேர்ந்து கிளர்ச்சியை நடத்தின. திராவிடர் கழகம் 42 மாநாடுகளையும், 16 போராட்டங்களையும் நடத்தியது. பிறகு சமூக நீதிக்காவலர் வி.பி.சிங் பிரதமராக வந்த நிலையில், வேலை வாய்ப்பில் மட்டும் 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை அளித்து 1990 இல் ஆணை பிறப்பித்தார்.

இதனை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில், உச்சநீதிமன்றத் தீர்ப்பு 9 நீதிபதிகள் அமர்வு 1992இல் தீர்ப்பளித்தது. மத்திய அரசில் முதல் முறையாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு (அய்.ஏ.எஸ்.முதல் பல நிலைகள்) 27 விழுக்காடு இட ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றது.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்களின்படி, 50 விழுக்காட்டிற்கு மேல் இடஒதுக்கீடு போகக்கூடாது என்பது போன்ற ஒரு நிலைப்பாடு(பாலாஜி வழக்கினைக் காட்டி) கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் அமலில் இருந்த 69 சதவிகிதத்திற்கு ஆபத்து ஏற்படாமல் தடுக்க, அப்போது ஜெயலலிதா அவர்கள் முதல்வரான நிலையில் (1992), திராவிடர் கழகம் அதனைக் காப்பாற்ற இதுவரை வெறும் ஆணையாக இருந்ததை, இனி சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமாக்கி (Act), பின்னோக்கி (Retrospective effect) சென்று அரசமைப்புச் சட்டத்தின் 9ஆவது அட்டவணைப் பாதுகாப்புடன் வைக்கலாம் என்று கூறிய யோசனையை முதல்வர் ஜெயலலிதா ஏற்று அனைத்துக் கட்சி கூட்டத்தையும், சட்டமன்றத்தையும் தனியே கூட்டி,

சட்டத்தை நிறைவேற்றச் செய்தார். 76ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டி, அன்றைய பிரதமராக இருந்த பி.வி.நரசிம்மராவுடன் பல சந்திப்புகள், பிறகு அது நாடாளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேறி, குடியரசுத் தலைவராக இருந்த சங்கர்தயாள் சர்மா அவர்களின் ஒப்புதல் பெற்று, 9 ஆவது அட்டவணைப் பாதுகாப்புடன் உள்ளது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மொத்த இடஒதுக்கீடு 69 சதவிகிதம் அதுவும் அரசு ஆணையாக இல்லாமல், சட்டமாக (Act ஆக) உள்ளது.

இதைச் செய்த செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு, திராவிடர் கழகம் "சமூகநீதி காத்த வீராங்கனை" என்று பட்டம் கொடுத்துப் பாராட்டியது.

ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட 50 சதவிகிதமானது, மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்ற பிரிவுக்கு 20 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 சதவிகிதம் என்று பிரிக்கப்பட்டு, சமூகநீதி பரவலாக ஏற்பட 1990ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் கலைஞர் செய்தார். மேலும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள இடஒதுக்கீட்டில் முஸ்லீம்களுக்கு 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

பிறகு அதேபோல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள பிரிவில், அருந்ததியினருக்கு 3 சதவிகிதம் தனியே மாநில அரசில் ஒதுக்கீடு செய்தார். அதன் காரணமாக தாழ்த்தப்பட்டோருக்குப் பரவலாக சமூகநீதி கிடைத்தது!

2005ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த 93ஆவது அரசமைப்பு திருத்த சட்டத்தின்படி மத்திய கல்வி நிறுவனங்களில் (தனியார் நிறுவனங்கள் உட்பட) ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது.

## திராவிடர் இயக்கம்,<br>காமராசர் ஆட்சியிலும் சமூகநீதி!

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும், சமூகநீதியில் கைவைக்கும் துணிவு இல்லா சூழ்நிலை நிரந்தரமாக பாதுகாக்கப்பட்டது, கலங்கரை வெளிச்சம்போல மற்ற

மாநிலங்களுக்கு இன்றும் அது வழிகாட்டியாக அமைந்துள்ளது. ‘இதனால் இது பெரியார் மண்’ என்று பீடுநடை போடுகிறது!

அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் (15(4)), அடுத்து 76 ஆவது திருத்தம், 93 ஆவது திருத்தம் என்று மூன்று அரசமைப்பு சட்டத் திருத்தங்கள் திராவிடர் இயக்கத்தின் முப்பெரும் சாதனைகளாகும்!

தேர்தலில் ஈடுபடாத, சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்குச் செல்லாத ஓர் இயக்கம் சமூகநீதியில், இத்தகைய சாதனைகளைப் படைத்தது என்பது ஓர் அதிசயமே!

திராவிடர் கழகம் நியாயமாகப் பெருமைப்படுகிறது.

**நன்றி: ‘தினத்தந்தி’,** 20.02.2018

# உலக சமூகநீதி நாள் சிந்தனை

**‘சமூகநீதி’ என்ற சொல்லாக்கம் - பயன்பாடு - அண்மைக் காலத்தில் அதிகமான அளவில் மக்கள் மத்தியில் தாராளமான புழக்கத்தில் உள்ளது.**

உலகின் மற்ற நாடுகளில், குறிப்பாக மேலை நாடுகளிலும், அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலும் அதன் பொருள் பொருளாதார பேதத்தை நீக்கி சமவாய்ப்பை ஏற்படுத்துவதற்கே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. காரணம் இந்தியாவில் உள்ள சமூக அமைப்பான ஜாதி வர்ண தர்ம முறை அங்கே எங்கேயும் கிடையாது என்பதுதான்.

பிறவிப் பேதம் பிறவியினால் நிர்ணயிக்கப்படும் சமூகத் தகுதி என்பது இந்தியா என்ற இந்நாட்டில் மட்டும்தான் உண்டு. அதற்குக் காரணம், வேத மதமாகிய பார்ப்பன சனாதன ஆரிய மதமான ஹிந்து மதம் என்று சமீப காலமாக அழைக்கப்படும் மதத்தின் உயிர் நாடியான வர்ணாசிரம பிறவிப் பேதமே!

வெகு சிறுபான்மையோர், மிகப் பெரும்பான்மையோரை அடக்கி, தங்களின் அடிமைகளாக்கிட, அவர்களது அறிவு, கல்வி வாய்ப்புகளை அடைத்து, தடுத்து, ‘கீழ்ஜாதி’ படிக்கட்டு ஜாதி முறையிலே பிறவி அடிப்படையில் நீக்க முடியாத வெளியேற முடியாத ஒன்றை ஆழ்ந்து திட்டமிட்டே நுழைத்து, தாங்கள் 3 சதவீதமே என்றாலும் ஆளும் வர்க்கத்தினையே ஆட்டிப் படைக்கும் ‘அறிவு எஜமானர்களாக’ தங்களை உயர்த்திக் கொண்டனர்.

சமூகநீதி கோரிடும் மற்ற நாடுகளில் (பொருளாதார அடிப்படையில் ஏழை பணக்கார முதலாளி தொழிலாளி என்ற

பேதத்தின் அடிப்படையில் சமத்துவத்திற்கு எதிரானது) என்ற சம தளத்தில் கயிறு இழுக்கும் போட்டியில் நேருக்கு நேர் எதிர் அணிகளாக நிற்கும் நிலை உண்டு.

ஆனால் இந்த 'ஞானபூமி' என்ற 'ஆரிய வர்த்த பூமியில்' படிநிலை ஏற்றத் தாழ்வுதான் வர்ண தர்ம முறையின் தனித்தன்மையான கொடுமையாகும்.

இதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் குறிப்பான ஒரு சொற்றொடரில் விளக்கினார். (Graded Inequality) 'படிக்கட்டு சமத்துவமின்மை' என்று

வர்ணஸ்தர்கள்

பிராமணர்

க்ஷத்திரியர்

வைசியர்

சூத்திரர்

அவர்ணஸ்தர்கள்

பஞ்சமர்

பெண்கள்

என்று ஆறுபடிகள். இந்த படிநிலை மேல்கீழ் முறையில் கடைசியில் வர்ண ஜாதிப் பெண்கள் அனைவரும் 'கீழானவர்களுக்கும் கீழானவர்கள்' என்ற தகுதியில்தான் ஹிந்து மதம் வைத்துள்ளது என்பதை விட மிகப் பெரிய சமூக அநீதி வேறு இருக்க முடியுமா?

இதற்கு மூல காரணம், ஆரியர்கள் இந்நாட்டிற்குள் ஆடு, மாடுகளை ஓட்டி வந்தபோது உடன் தங்கள் பெண்களை அழைத்த வராததோடு, வந்த ஒரு சிலரும் தொடர்ந்து இவர்களுடன் பயணிக்க முடியவில்லை. (ஆதாரம்: அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் எழுதியுள்ள 'இந்து மதம் எங்கே போகிறது' என்ற நூல்) இங்குள்ள பெண்களையே தங்கள் வாழ்க்கையில் இணைத்துக் கொண்டதால், வேதத்தில் அவர்களை

"ஸ்திரீனாந்த சூத்ரஜாதினாம்"

பெண்கள் அனைவரும் சூத்திர ஜாதி
"நஸ்தரீ சூத்ர வேதமத்யாதாம்" என்று கூறப்படுகிறது.

அதனால் பெண்களும், சூத்திரர்களும் வேதங்களை ஓதக் கூடாது; வேத ஓசையைக் கேட்கக் கூடாது. யாகங்கள் நடந்தால்... அதில் ஓதப்படும் வேதமந்திரங்களைக் கேட் காமல் இருப்பதற்காக புடவையால் காதை மூடிக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்குக் கல்விக்கான வாய்ப்பே கிடையாது அவர்கள் வெளியில் போகவும் கூடாது. அப்புறம்...?

"ஸ்தரிதாம உப நயனஸ்தானே
விஹாகம் மநு ரப்ரவீத்"

அதாவது பெண்களுக்கு உபநயனம் உள்ளிட்ட எவ்வித மந்திர சமஸ்காரங்களும் கிடையாது."

(அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் "இந்துமதம் எங்கே போகிறது?" நூல் (பக்கம் 171). முதல் பதிப்பு 2005

எனவே சமூகநீதி என்பது நமது நாட்டில் கல்வி உத்தியோக, சம வாய்ப்பு, சம தகுதி (Equality before law, and equal opportunities for all) என்ற இந்திய அரசமைப்புச் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளை நிலை நாட்டவே, ஜாதியினால் காலங்காலமாக கல்வி உரிமை, உத்யோக உரிமை, சமத்துவம் மறுக்கப்பட்டவர்களுக்கு தனி வசதியாக வகுப்புரிமை இடஒதுக்கீடு தேவைப்பட்டது; இன்னமும் தேவைப்படுகிறது.

இதில் மக்கள் தொகையில் சரி பகுதியாக உள்ள அனைத்து ஜாதிப் பெண்களுக்கும் இடஒதுக்கீடு கட்டாயம் தேவை; அவர்களுக்கு 50 விழுக்காடு ஒதுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் வற்புறுத்தினார். கல்வி உத்தியோகத் துறையில் திமுக ஆட்சியில் கலைஞர் முதல்வராக இருந்தபோது இதை ஆணை சுற்றறிக்கை மூலம் செயல்படுத்தினார்கள்.

திராவிடர் இயக்கம் இன்றேல், அதன் ஆட்சிகள் மலர்ந்திருக்காவிட்டால் கல்வியில், உத்தியோகங்களில் இடஒதுக்கீடு, வகுப்புரிமை ஆணையாக, சமூக நீதி சட்டங்களாகியிருக்கவோ,

அதன் பயனை வாய்ப்பு மறுக்கப்பட்ட பல கோடி மக்கள் துய்க்கவுமான வாய்ப்போ இன்றைய சமூக மாறுதல் அமைதிப் புரட்சியாக வந்திருக்காது;

இந்தியாவின் இதர மாநிலங்களின் ஆட்சிக் காலங்கள் இந்த கலங்கரை வெளிச்சத்தில், தன் ஆட்சிக் கடலில் பயணிக்க முயற்சிக்கின்றன!

எனவே, வேறு நாடுகளில் சமூகநீதி வர்க்க பேதத்தை ஒழிப்பது, மாற்றுவது என்பதாகும். இங்கோ சமூகம் என்பது வர்ண பேதத்தை பிறவிப் பேதத்தை உயர் ஜாதி, தாழ்ந்த ஜாதி ஆண் எஜமானன் பெண் அடிமை என்ற பிறவிப் பேதத்தையும் இணைத்து சேர்த்து ஒழிப்பது என்ற பெரும் பணியாகும்.

இதுதான் பெரியார் கண்ட பெரு வெற்றி இதனை மாற்றிட எந்த கொம்பன்கள், முட்டினாலும் மோதினாலும் ஒழிக்க முடியாது ஆம் ஒழிக்கவே முடியாது! எனவே, சமூக நீதி என்பது இந்த தனிப் பொருள் கொண்ட தத்துவப் போராட்டமாகும்!

சமூகநீதி என்பது இங்கே ஆணாதிக்க சமூகத்தை, வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெறியும் பாலியல் நீதியையும் உள்ளடக்கியதே!

எனவேதான் தந்தை பெரியார் தத்துவங்கள் பற்பல நேரங்களில் பல முக்கிய இடங்களில் பிரதிபலிக்கிறது. டாக்டர் அம்பேத்கர் அரசமைப்புச் சட்ட முகவுரை பீடிகையில் (Preamble) “Justice Social, Economic, Political என்ற மூன்றையும் இணைத்தார்; இதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்ன தெரியுமா?

சமூகநீதி என்பது நமது நாட்டில் தனித்தன்மையானதும் முதன்மையானதும், முன்னுரிமை பெற வேண்டிய ஒன்றும் ஆகும்.

சமூகநீதி
பொருளாதார நீதி
அரசியல் நீதி

இவை மூன்றும் தனித்தனியானவையே! இந்நிலையில் சமூகநீதியையும், பொருளாதார நீதியையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு ஒன்றில் (வசந்தகுமார் வழக்கில், ஜஸ்டிஸ் ஓ. சின்னப்ப ரெட்டி அவர்கள் குறிப்பிட்டது முக்கியம்).

இடஒதுக்கீடு என்பது ஏழ்மையை ஒழிக்கும் திட்டம் அல்ல; (அது தனியே செய்யப்பட வேண்டியது; சமத்துவப்படுத்தும் ஏற்பாடு). காலங் காலமாக நிலவிய சமூக அநீதியை விரட்டும் ஏற்பாடுதான் சமூகநீதி. (Reservation is not a poverty - alleviation scheme) **புரிந்து கொள்வீர்**!

## இணைப்பு

# வகுப்புவாரி உரிமையின் வரலாற்றுச் சுவடுகள்...

**1892** - 1911 காலகட்டத்தில் வேலை வாய்ப்புகளில் பார்ப்பனர் ஆதிக்கம் குறித்து குறிப்பு :

"பொறியாளரில் 21க்கு 17 பேரும்; டிபுட்டி கலெக்டரில் 140க்கு 77 பேரும்;

மாவட்ட முன்சீப்புகளில் 128க்கு 93 பேரும்;

பட்டதாரிகளில் 650க்கு 452 பேரும் பார்ப்பனர்களே.

1907இல் சட்ட கவுன்சில் உறுப்பினர்களில் 12க்கு 11 பார்ப்பனர்கள். மத்திய காங்கிரஸ் கமிட்டியில் 15க்கு 14 பேர் பார்ப்பனர்கள்."

### வரலாற்று நிகழ்வுகள்

**1911 :** ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் 'அய்ரிஷ் மயிலாப்பூர் பார்ப்பனத்தி' என்று அழைக்கப்பட்ட அன்னிபெசண்டுக்கு சமூக நீதி குறித்து கடிதம் எழுதினார்.

**1912 :** Madras united league (சென்னை அய்க்கிய சங்கம்) சென்னை அக்பர் சாகிப் தெருவில் நடைபெற்ற 'திராவிடர் விடுதி' 'Dravidian Hostel' இரண்டும் திராவிட மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பில் உதவியது. (இரண்டுக்கும் டாக்டர் சி.நடேச முதலியார் செயலாளர்) அரசு துறையில் பணி புரிபவர்கள் பற்றி ஆராய, ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டது. சட்டசபை உறுப்பினராயிருந்த சர்.பி.தியாகராயர் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும் ராயல் கமிஷனரிடம் கோரினார். கமிஷன் முன் சாட்சியமளித்த சென்னை நிருவாகக் குழு உறுப்பினர் அலெக்சாண்டர் கார்டியூ; திறந்த போட்டி கூடாது; வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேவை; இல்லாவிட்டால் பார்ப்பன ஏகபோக ஆதிக்கம் (Brahmin Monopoly) ஏற்படுமெனக் கூறினார்.

**1913 :** சென்னை அய்க்கிய சங்க முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் அதன் பெயர் ‘சென்னை திராவிடர் சங்கம்’ என மாற்றப்பட்டது.

**1914 :** சென்னை, இந்து உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற திராவிடர் சங்க ஆண்டு விழாவில் டாக்டர் நாயர் ‘Awake, Arise, or Be for ever fallen’ ‘விழித்தெழு, வீறு கொள்; இன்றேல் என்றென்றைக்கும் வீழ்ந்துபடுவாய்’ என அறைகூவல் விடுத்தார்.

**1915 :** ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் மத்திய சர்க்காரில் இம்பீரியல் கவுன்சில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். டாக்டர் நாயர் லண்டனுக்குச் சென்று பாராளுமன்ற உறுப்பினரிடையே வகுப்புவாரி உரிமையின் நியாயத்தை விளக்கினார். கல்வித்துறை வேலைகளில் 578க்கு 399 பேர் பார்ப்பனர்கள் (28 பேர் மட்டும் பார்ப்பனரல்லாதார்) அந்த காலத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் பற்றிய புள்ளி விவரம் : படித்த பார்ப்பனர்கள் 75 சதவிகிதம், படித்த பார்ப்பனரல்லாதார் 3 சதவிகிதம் என்றும் பதிவுகள் காட்டுகின்றன.

**1916 :** மத்திய சட்டசபைத் தேர்தலில் 25 உறுப்பினர்களில் 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சென்னையில் இருந்து 2 இடத்துக்கு 7 பேர் போட்டி போட்டு பி.என்.சர்மாவும், வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டாக்டர் டி.எம்.நாயர் தோற்றார். நாயரின் தோல்வி பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு ஒரு திருப்புனையாக அமைந்தது. வெஸ்ட் கோஸ்ட் ஸ்பெக்டேட்டர் (West coast speactator) எனும் இதழ் ‘மயிலாப்பூரும் திருவல்லிக்கேணியும்’ தங்கள் இதயங்களைத் தொட்டுப் பார்க்கட்டும் என்று எழுதியது. ‘பார்ப்பனரல்லாதார் இயக்கம்’ தோன்றுவதற்கு டாக்டர் நாயரின் தேர்தல் தோல்வி காரணமாக அமைந்தது. டாக்டர் நடேசனார். சர்.பி.தியாகராயர், டி.எம்.நாயர் ஆகியோர் முயற்சியால் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. (South Indian Liberal Federation) அப்போது வெளியிடப்பட்ட பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையில் (Non - Brahmin manifesto) கல்வி, வேலை வாய்ப்பில் பார்ப்பனர் ஆதிக்கம் குறித்து தென்னிந்திய அரசியல் எதிர்காலம் எப்படி அமைய வேண்டுமென்று விளக்கப்பட்டது.

காங்கிரஸ் மகாசபை கேசவப் பிள்ளை தலைமையில் சென்னை உதவித் தலைவர். வகுப்புவாரி உரிமைக் கோரிவந்த நீதிக்கட்சி வளர்ந்துவிடக் கூடாது என்கிற நோக்கத்தோடு காங்கிரசே வகுப்புவாரி உரிமை கோருவதாகக் காட்டிக் கொண்டது.

**1917 :** நீதிக்கட்சி, அன்றைய மத்திய சர்க்காருக்கு கொடுத்த மனுவின் விளைவாக சர்க்கார் வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன் மூலம் ஒடுக்கப்பட்ட அழுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி வேலை வாய்ப்புக்களைக் கொடுக்க முன்வந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் என்பது தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களைக் குறிக்குமென்று அறிக்கை கூறியது.

**1918 :** டாக்டர் நாயர் தலைமையில் சர்.ஏ.ராமசாமி முதலியார், சர்.கே.வி.ரெட்டி நாயுடு, பனகல் அரசர் முதலியோர் இலண்டனுக்குச் சென்று பாராளுமன்றத்தில் வகுப்புரிமைக் கோரி சாட்சியமளித்தனர்.

மைசூர் மகாராஜாவின் ஆலோசகர் சர்.விஸ்லிமில்லர் அரசு பதவிகளில் பார்ப்பனர் ஆதிக்கத்தைச் சுட்டிக்காட்டி எல்லா ஜாதியினருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று வாதாடினார்.

**1919 :** இந்தியர்கள் மாகாண ஆட்சி மன்றங்களில் பங்கு கொள்ள மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டம் வகை செய்தது. நீதிக்கட்சியின் முயற்சியால் தேர்தல் விதியில் 65ஆவது பிரிவு சேர்க்கப்பட்டு சட்டசபைத் தேர்தலில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. பார்ப்பனரல்லாதாருக்கு 24 இடம் ஒதுக்கப்பட்டது. ஆகஸ்ட் 8இல் இலண்டன் பாராளுமன்றத்தில் உரையாற்றிய லார்ட் ஆம்பில் (Lord Amphil) இரட்டை ஆட்சியால் இந்தியாவில் பார்ப்பன ராஜ்யம் ஏற்படுமென்றும், இடஒதுக்கீட்டின் அவசியத்தை வலியுறுத்தியும் உரையாற்றினார். திருச்சியில் நடைபெற்ற 25ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

**1920 :** கடலூர் எ.சுப்பராயலு - வின் நீதிக்கட்சி அமைச்சரவை பதவிக்கு வந்தது. திருநெல்வேலியில் நடைபெற்ற 26ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

**1921 :** வகுப்புரிமை உரிமை கோரி தணிகாசலம் செட்டியார் முன்மொழிந்த தீர்மானத்தை டாக்டர் சி.நடேச முதலியார் வழிமொழிந்தார். எல்லாத் துறைகளிலும் உரிமை கொடுக்காவிட்டால் வரி கொடுக்க முடியாது. No Representation - No Tax என ஆர்.கே. சண்முகம் செட்டியார் கூறினார். பார்ப்பனர்கள் இதை பி.சிவராவ் தலைமையில் எதிர்த்தனர். ஆனாலும் - வகுப்புரிமை உரிமையை அமல்படுத்தும் அரசாணை எண் 618 எம்.ஆர்.ஓ. (பொது) நாள்: 16.09.1921 முதன் முதலாக செலுத்தியதால் இந்த ஆணையை அமலாக்கப்பட முடியவில்லை. தஞ்சையில் நடைபெற்ற 27ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

**1922 :** அரசாணை எண் 650 எம்.ஆர்.ஓ. (பொது) நாள் 15.08.1922 பின்வருமாறு வகுப்புரிமை பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென ஆணையிட்டது. கூடுதல் பதவிகள் 12இல் பார்ப்பனரல்லாதார் 5; பார்ப்பனர் 2; மகமதியர் 2; கிறிஸ்துவர் 2; தாழ்த்தப்பட்டவர் 1;

இவ்வாணையை பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆதரித்த பெரியார் மீண்டும் திருப்பூரில் நடைபெற்ற 28ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை கொண்டு வந்தார்கள்.

**1923 :** பதவி உயர்வுகளுக்கும் வகுப்புவாரி உரிமை உத்தரவு செல்லுபடியாகுமென நீதிக்கட்சி அரசு உத்தரவிட்டது. அரசாணை எண். 87, கல்வி நாள், (16.01.1923) இதுவும் பார்ப்பனர்கள் எதிர்ப்பால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சேலம் 29ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை தந்தை பெரியார் கொண்டு வந்தார்.

இரண்டாவது நீதிக்கட்சி மந்திரி சபை பனகல் அரசர் தலைமையில் பதவியேற்றது. மதுரை, திருச்சி காங்கிரசு மாநாடுகளிலும் தந்தை பெரியார் வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

**1924 :** பனகல் அரசர் சென்னைப் பல்கலைக் கழக மசோதாவைக் கொணர்ந்தார். மருத்துவக் கல்லூரியில் படிக்க சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டுமென்றிருந்ததை நீக்கினார்.

**1925 :** எம்.கிருஷ்ணன் நாயர் தலைமையில் சென்னை அரசு வகுப்புவாரிமுறை சரியாக செயல்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க குழு ஒன்றை நியமித்தது (07.02.1925) பார்ப்பன ஆதிக்கத்தை சர்க்கார் உத்தியோகங்களிலிருந்து முழுமையாக நீக்கக் கோரும் தீர்மானத்தை டி.ஏ.இராமலிங்கம் செட்டியார் முன்மொழிந்து டாக்டர் டி.நடேச முதலியார் வழிமொழிய தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது.

காஞ்சிபுரத்தில் நடந்த 31ஆவது தமிழ் மாகாண காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். தீர்மானம் ஏற்கப்படாமல் தந்தை பெரியார் உறுதிபூண்டு காங்கிரசை விட்டு வெளியேறினார்கள்.

**1927 :** நீதிக்கட்சி ஆட்சியில் பார்ப்பனரல்லாதார் சூத்திரர் என்று அழைக்கப்பட்டது தடை செய்யப்பட்டது. 04.11.1927இல் சைமன் கமிஷன் முன்பு சர்.ஏ.பி.பாத்ரோ தலைமையில் நீதிக்கட்சி கொடுத்த மனுவில் மனுதர்ம (அ) நீதி எடுத்துக் கூறப்பட்டது.

**1928 :** டாக்டர் சுப்பராயன் (16.03.1928) பிரதமராகப் பதவியேற்றார். அந்த அமைச்சரவையில் சர்.முத்தையா முதலியார் மந்திரியாக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில்தான் வகுப்புவாரி முறை முழுமையாகஅமலாக்கப்பட்டது.தந்தைபெரியார்இக்காரணத்துக்காக அவர்களை ‘முத்து - அய்யா’ எனப் புகழ்ந்தார்கள்,

**1935 :** இந்திய அரசு சட்டம் 1935 (Government of India act-1935) வாயிலாக, இந்திய அரசியல் 55 ஆவது பகுதி 2ஆவது பாராவில் - அகில இந்திய அளவில் அரசியலில் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்கு நாடாளுமன்றம் சட்ட மன்றங்களில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

**1942 :** கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையில் வகுப்புவாரி முறை அமலாக்கப்பட வேண்டுமெனக் கூறியது. (சென்னை அரசாணை எண் : 960 நாள் 14.03.1942)

**1943 :** சென்னை மாகாணத்தில் 8.33% இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்பட்டது.

**1946 :** மேற்குறிப்பிட்ட 8.33 சதவிகிதம் என்பது 12½ சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டது.

**1947 :** சென்னை சட்டசபையில் தென்னேட்டி விசுவநாதம் வகுப்புவாரி ஆணையை ரத்து செய்யக் கோரி கொண்டு வந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் மந்திரிசபை வகுப்புவாரி உரிமையைப் பின்வருமாறு மாற்றி உத்தரவிட்டது.

மொத்தப் பதவி 14; பார்ப்பனரல்லாத முன்னேறிய வகுப்பு 6; பார்ப்பனரல்லாத பின்தங்கிய வகுப்பு 2; பார்ப்பனர்கள் 2; தாழ்த்தப்பட்டோர் 2; முகமதியர் 1; கிறிஸ்துவர் 1.

**1949 :** சென்னை அரசாணை எண் 1435இன்படி கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையில் அனைத்து ஜாதியினருக்கும் இடமளிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டது.

**1950 :** டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் 26.01.1950இல் தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்களுக்கு அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு ஏற்பட காரணமாக இருந்தார். இந்திய அரசமைப்புச்சட்டம் அமலுக்கு வந்தபின் 27.07.1950இல் சென்னை உயர்நீதிமன்றம் வகுப்புவாரி உரிமை இடஒதுக்கீடு அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது எனத் தீர்ப்பளித்தது. சட்டம் வகுத்தவர்களில் ஒருவரான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் என்ற பார்ப்பனரே செண்பகம் துரைராஜன், சி.ஆர்.சீனிவாசன் என்ற இரு பார்ப்பனர்களைத் தூண்டி வழக்கு போடுமாறு செய்து மரபுக்குப் புறம்பாக அவரே வாதாடி, வெற்றி பெற்றார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து தந்தை பெரியார் திருச்சியில் 03.12.1950இல் வகுப்புரிமை மாநாடு கூட்டினார். அப்பீலிலும் சுப்ரீம் கோர்ட் சென்னைத் தீர்ப்பை உறுதி செய்தது. பெரியாரின் வகுப்புரிமைப் போர்ப்பரணி டில்லியிலும் எதிரொலித்தது. சென்னை நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொணர வேண்டுமெனக் கூறப்பட்டது.

**1951 :** தந்தை பெரியார் போராட்டத்தின் காரணமாக - முதன் முதலாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. 243 உறுப்பினர்கள்

ஆதரவாகவும், 7 பார்ப்பனர்கள் மட்டும் எதிர்ப்பாகவும் ஓட்டளித்தனர். அரசியல் சட்டத்தில் 15 (4) சேர்க்கப்பட்டது. சட்ட மன்றத்துக்கோ, பாராளுமன்றத்துக்கோ செல்லாத தந்தை பெரியாரால் இந்தியாவில் வசிக்கும் அனைத்து பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்வியிலும் வேலை வாய்ப்புகளிலும் வகுப்புவாரி உரிமை வழங்கப்பட்டது.

**1953 :** பிற்படுத்தப்பட்டோர் நிலை குறித்து ஆராய காகாகலேல்கர் குழு அமைக்கப்பட்டு, குழுவும் தனது ஆய்வு அறிக்கையை 03.09.1956இல் குடியரசுத் தலைவரிடம் அளித்தது. பரிந்துரை அமல்படுத்தப்படாமலேயே குப்பைத் தொட்டியில் போடப்பட்டது.

**1954 :** தமிழக அரசாணை எண் 2643, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதமும்; பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 சதவிகிதமும் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டது.

**1970 :** நீதிமன்ற தீர்ப்புகளின்படி இட ஒதுக்கீடு என்பது 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக்கூடாது என்ற நிலை ஏற்பட்டது. தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 விழுக்காடும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 விழுக்காடுமாகச் சேர்ந்து 41 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. இந்தக் காலகட்டத்தில் தந்தை பெரியார் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். இடஒதுக்கீடு 50 விழுக்காடு வரை இருக்கலாம் என்று தீர்ப்பு இருக்கையில், தமிழ்நாட்டில் 41 விழுக்காடுதானே இருக்கிறது. அதை மேலும் உயர்த்த வாய்ப்பு இருக்கிறதே என்று அழுத்தமாகச் சொன்னதன் பெயரில் அப்பொழுது இருந்த தி.மு.க. அரசு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 விழுக்காடும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 விழுக்காடும் இடஒதுக்கீடு செய்து, மொத்த ஒதுக்கீட்டை 49 விழுக்காடாக உயர்த்தியது.

இதுவேதான் தமிழக அரசு நியமித்த சட்டநாதன் குழு பரிந்துரையாக வந்தது.

**1979 :** இதுவரை பிற்படுத்தப்பட்டோராகக் கருதப்பட்டவர், ரூ.9000க்கு மேல் ஆண்டுவருவாய் உடையவரெனில் முற்பட்டவராய்க் கருதப்படுவரெனும் தமிழக அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அரசாணை எண் 4156 (சமூக நலத்துறை) நாள் 02.07.1979 இவ்வரசாணை பிற்படுத்தப்பட்ட மக்களின் தலையில் விழுந்த பேரிடியென்பதுடன், அதுவரை பெற்றிருந்த வகுப்புவாரி உரிமையினை நயவஞ்சகமாய் கலைந்தெறிய அரசு துணையுடன் பார்ப்பனர் மேற்கொண்ட சூழ்ச்சியே என்பதை உணர்ந்த திராவிடர் கழகம் உடனடியாக முதல் எதிர்ப்புக் குரல் எழுப்பியது. தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் மற்றும் சமூக நிறுவனங்கள் எதிர்த்தன. திராவிடர் கழகம் அரசாணையை எரித்து நேரிடையாக களத்திலிறங்கவே, அரசாணை திரும்பப் பெறப்பட்டது. மேலும் பிற்படுத்தப்பட்டோருக்கு 31% மாக இருந்த ஒதுக்கீடு 50% மாக மாற்றப்பட்டது. இதனால் மொத்த இடஒதுக்கீடு அளவு 68% ஆனது.

**1981 :** மண்டல் குழு வாக்கெடுப்பின் போது அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக கட்சி வேறுபாடு இன்றி இதை வரவேற்றனர்.

**மண்டல் குழு பரிந்துரைகளின்... குறிப்பிடத்தக்க சில...**

அ) உச்சநீதிமன்ற தீர்ப்பு 50%க்கு மேல் இடஒதுக்கீடு இருத்தலாகாது என்பதால் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27%ம் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 22.5% (ஆக 49.5 சதவிகிதம்)

ஆ) பதவி உயர்வுகளிலும் இடஒதுக்கீட்டு உரிமை கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

இ) அரசு சலுகை பெறும் தனியார் நிறுவனங்களும் இம்முறையை பின்பற்ற வேண்டும்.

ஈ) மத்திய அரசு நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு வழங்கிட வேண்டும்.

உ) மூன்று ஆண்டுகள்வரை காலி இடங்களுக்கு தகுதியான ஆட்சிகள் கிடைக்கவில்லையெனக் கூறி, அதே இடங்களை முற்பட்ட வகுப்பினருக்கு வழங்கும் முறை கூடாது...

இவ்வாறு மேலும் பல்வேறு பரிந்துரைகளைக் கொண்டிருப்பினும் 'இந்திய தேசிய பார்ப்பனிய நடுவனரசு' தனது இயல்புக்கேற்ப பரிந்துரைகளை நிறைவேற்றாமல் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்றும் துரோகமிழைத்தே வருகிறது.

**1982 :** தமிழக அரசு பிற்படுத்தப்பட்டவருக்கு 50% இடஒதுக்கீடு செய்தமையினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பார்ப்பனர் வழக்கு தொடுத்தனர். (14.10.1982)

தமிழக அரசுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கேயெனினும் அரசின் போக்கில் அய்யம் கொண்ட திராவிடர் கழகம் வழக்கில் தன்னையும் ஒரு பிரதிவாதியாக சேர்த்துக் கொள்ளுமாறு மனுச் செய்து இணைத்துக் கொண்டது.

அதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பாக குழுவொன்றை நியமித்து அரசு தனது அறிக்கையை இரண்டு ஆண்டுகளுக்குள் உச்ச நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்கிற ஆணைக்கிணங்க தமிழக அரசு 'அம்பா சங்கர் குழு'வினை நியமித்தது. அம்பாசங்கர் குழுவின் காலக்கெடு 01.01.1985இல் முடியவிருப்பதாலும், உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட காலவரையறையான இரண்டாண்டு என்பது முடியவிருப்பதாலும், அன்றைய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி நடவடிக்கையினாலும் தமிழக அரசு காலவரையறையை நீடித்துத் தருமாறு உச்சநீதிமன்றத்துக்கு வேண்டுகோள் விடுத்தது.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துத் துறைகளிலும் - சம வாய்ப்பும் உரிய பிரதிநிதித்துவமும் கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும், தொடர்ந்து கொண்டே இருக்கும்!

**1983 :** மண்டல் குழு அறிக்கைகள் அமல்படுத்தக்கோரி திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதே கோரிக்கையை வலியுறுத்தி நாகபுரியில் மாநாடு நடத்தப்பட்டது.

**1984 :** திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி மண்டல் அறிக்கையை அமல்படுத்த டெல்லியில் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டினார்.

**1985 :** திராவிடர் கழகத்தின் முயற்சியால் டெல்லியில் ஆர்ப்பாட்டமும் 1 லட்சம் பேர் பங்கேற்ற பேரணியும் நடத்தப்பட்டது.

**1986 முதல் 1989** வரை திராவிடர் கழகத்தின் சார்பில் மண்டல் குழு அறிக்கையை வலியுறுத்தி 42 மாநாடுகளும், பேரணிகளும் 16 போராட்டங்களும் நடத்தப்பட்டன.

**1990 :** வி.பி.சிங் அவர்கள் தலைமையிலான அரசு மண்டல் குழு அறிக்கையை அமலாக்கியது.

**1993 :** இடஒதுக்கீடு அளவு 50க்கு மேல் தாண்டக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. இத்தீர்ப்பை கொளுத்தும் போராட்டத்தை திராவிடர் கழகம் நடத்தியது. 69 சதவிகிதம் இடஒதுக்கீடு நீடிக்க இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தக்கோரி முழு அடைப்பு நடத்தப்பட்டது.

**1994 :** 69% இடஒதுக்கீட்டை பாதுகாக்கும் 31சி சட்ட முன்வடிவு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி அவர்களால் எழுதப்பட்டு சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றத்திலும் நிறைவேற்றப்பட்டு தனிசட்டமாக ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

இதனை தடைசெய்யக் கோரி ‘வாய்ஸ்’ என்ற அமைப்பின் சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டு தற்போது உச்ச நீதி மன்றத்தில் உள்ளது.

# 69% இடஒதுக்கீட்டைப் பாதுகாக்கும் சட்டத்தை வெளியிட்ட அரசிதழின் முகப்புப் பக்கம்

(C)

GOVERNMENT OF TAMIL NADU

1994

Registered No M 1

(Price: Rs. 0·45

**TAMIL NADU**
**GOVERNMENT GAZETTE**
EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 368] MADRAS, TUESDAY, JULY 19, 1994

Aadi 3, Bhava, Thiruvalluvar Aandu—2025

## Part IV—Section 2

**Tamil Nadu Acts and Ordinances.**

The following Act of the Tamil Nadu Legislative Assembly received the assent of the President on the 19th July 1994 and is hereby published for general information :—

ACT No. 45 OF 1994.

*An Act to provide for reservation of seats in educational institutions in the State and of appointments or posts in the services under the State for the Backward Classes of citizens and for persons belonging to the Scheduled Castes and the Scheduled Tribes in the State of Tamil Nadu.*

WHEREAS the policy of reservation for the social, economic and educational advancement of the people belonging to Backward Classes of citizens in admissions to educational institutions in the State and for appointments in the services under the State has been under implementation in the State of Tamil Nadu for a long time ;

AND WHEREAS the State of Tamil Nadu is a pioneer State in providing reservation for the underprivileged and the first communal Government Order was passed in the year 1921 and the proportional representation for communities was made in the year 1927 in the State of Tamil Nadu ;

AND WHEREAS a large percentage of population of Tamil Nadu suffering from social and educational backwardness for many years have started enjoying the fruits of the reservation policy and have been able to improve their lot and attain a higher standard of living :

AND WHEREAS clause (4) of Article 15 of the Constitution enables the State to make any special provision for the advancement of any socially and educationally Backward Classes of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes ;

AND WHEREAS clause (4) of Article 16 of the Constitution enables the State to make any provision for the reservation of appointments or posts in favour of any Backward Class of citizens which, in the opinion of the State, is not adequately represented in the services under the State ;

AND WHEREAS under clause (1) of Article 38 of the Constitution, the State shall strive to promote the welfare of the people by securing and protecting as effectively as it may, a social order in which justice, social, economic and political, shall inform all the institutions of the national life ;

(A Group) IV-2 Ex. (368)—1 [ 323 ]

# தந்தை பெரியார் தொலை நோக்குடன் கூறிய ‘பிராமிணோக்கரசி’

உண்மைக்கும், உயர் எண்ணங்களுக்கும் மாறான கருத்துடையவர்களாகவே பார்ப்பனர்கள் இருந்து வருகின்றனர். பார்ப்பனர்களை முழுதாகப் புரிந்து கொண்ட தந்தை பெரியார் அவர்கள் பார்ப்பன அகராதியை ‘குடிஅரசு’ 29.08.1926இல் வெளியிட்டுள்ளார்கள்.

பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்கும், சுதந்திரத்திற்கும் எதிராகச் செயல்பட்டு வரும் பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத மக்களிடம் சமத்துவம், சகோதரத்துவம் பாராட்டாத பார்ப்பனர்கள் ,பார்ப்பன அகராதிப்படி தங்களை தேசபக்தர்கள் என்று கூறிக்கொள்கின்றனர்.

சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த தந்தை பெரியார் அவர்களை, ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்ற இலட்சியத்திற்குப் போராடிய தந்தை பெரியார் அவர்களை பார்ப்பன அகராதிப்படி ‘தேசதுரோகி’ என்கின்றனர்.

இந்தச் சுயநலக்கூட்டத்திற்கு 90ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் அவர்கள் நியாயமான முறையில் பதில் அளித்துள்ளார்.

இதோ பெரியார் பேசுகிறார் - “என்னைப் பொறுத்தவரை தேசாபிமானமும், இராஜ்ஜிய நாணயமும் எனக்கு உண்டு என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டியது அனாவசியம். என்னுடைய சுயமரியாதைக்கும், சுதந்திரத்திற்கும் தேசாபிமானத்தையும், இராஜ்ஜிய நாணயத்தையும் கூட விற்கத்தயாராக இருக்கிறேன்”

**- ‘குடிஅரசு’, 05.06.1927**

“நான் தேசத்துரோகி என்றழைக்கப்படுவதிலோ, நாட்டை அரசாங்கத்திற்குக் காட்டிக் கொடுத்தவன் என்று அழைக்கப்படுவதிலோ கடுகளவு கூடக் கவலைப்படவில்லை. எப்படிப்பட்டவர்களால் அப்படி அழைக்கப்படுகிறேன் என்பது எனக்குத் தெரியும். அயோக்கியர்களாலும்,சுயநலக்காரர்களாலும், ஒரு வேளைக்கஞ்சிக்கு மானத்தை விற்றுப் பிழைக்கின்ற இழிநிலையில் உள்ளவர்களாலும், முட்டாள்களாலும் அழைக்கப்படுவதை எவனாவது லட்சியம் செய்வானா? அதற்காகத் தன்னுடைய முயற்சியை எவனாவது மாற்றிக் கொள்வானா என்று கேட்கின்றேன்?

**- ‘குடிஅரசு’, 06.06.1937**

என்று 24 கேரட் தேச பக்தர்களுக்கு உரைக்கும்படி தக்கபதிலடி கொடுத்துள்ளார். ஆனாலும் அவர்கள் இன்று வரை திருந்தியபாடில்லை.

“மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம், மானமற்ற ஒருவனுடன் போராடுவது கஷ்டமான காரியம்” என்று நடைமுறை சிக்கலையும் பெரியார் விவரித்துள்ளார்.

பல்வேறு தேசிய இனங்கள், பல்வேறு ஜாதிகள், பல்வேறு மொழி, கலாச்சாரம், பண்பாடு உள்ள மக்களைக் கொண்ட நிலப்பரப்பினை அடிமைப்படுத்திய வெள்ளையர்கள் தங்கள் நிர்வாக வசதிக்கேற்ப ஒரு நாடாக உருவாக்கினர்.

அப்படிப்பட்டவர்கள் நாட்டைவிட்டு வெளியேறும்போது அவரவர் உரிமையை அவரவர்களிடம் ஒப்படைத்துச் செல்வதுதான் முறையாகும். அப்படிச் செய்யாமல் 97 சதவீதம் உள்ள மக்களின் உரிமையை 3 சதவீதம் உள்ள பார்ப்பனர்களிடம் ஒப்படைத்துச் செல்வது அநீதியானது என்ற அடிப்படையிலேயே அன்று தந்தை பெரியார் அவர்கள் போராடினார்.

“வெள்ளைக்காரன் வெளியேறுவதற்கு முன்னால் பார்ப்பான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; இல்லாவிட்டால், **பார்ப்பன நாயகம்** என்ற சித்திரவதைக் கொடுமைக்கு ஆளாவோம்”

- என்ற கருத்தை அய்யா தந்தைபெரியார் அவர்கள் காங்கிரசில் உயர்ந்த நிலையிலே இருந்தபோதே, அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

‘Brahminocracy’ என்ற புது வார்த்தையை அந்தக் காலத்திலேயே உருவாக்கிய தந்தை பெரியாரின் தொலை நோக்கறிவை என்னென்பது?

அய்யா இதைச் சொன்ன ஆண்டு - 1925

அய்யா அவர்கள் அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்து - இன்றும் பொருத்தமாக இந்தியா முழுவதுமே ‘Brahminocracy’ ஆளுகை பரவி நிற்கிறது என்னும் அளவுக்குப் பொருத்தமாக இருக்கிறது.

‘Brahminocracy’ என்றால் என்ன? “A Government of the Brahmins, for the Brahmins, and by the Brahmins” என்று அர்த்தம்.

கல்லூரிக்கே போகாத தலைவர் தந்தை பெரியார் அவர்கள் ஆங்கில மொழிக்கு வடித்துத் தந்த அருமையான சொல் இது.

இது இந்து பத்திரிகையிலேயே 1925 - ஆம் ஆண்டில் இடம் பெற்றிருக்கிறது.

தந்தை பெரியார் அவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டு 90ஆண்டுகளுக்குப் பிறகு இன்று பல்வேறு தரப்பிலிருந்து “சிஸ்டம்” System சரியில்லை என்ற குரல் ஒலிக்கின்றது.

ஆட்சி, அதிகாரம் என்ற அரசு சம்பந்தப்பட்ட ‘சிஸ்டம்’ (System) என்றால்

(i) Legislative - சட்டம் இயற்றும் அமைப்பு

(ii) Executive - அரசு நிர்வாகத் துறைகள்

(iii) Judiciary - நீதித்துறை

ஆகிய இவை மூன்று பிரிவுகளைத்தான் பொதுவாகக் குறிக்கும். இப்படிப்பட்ட ‘சிஸ்டம்’ அதாவது அரசின் கட்டமைப்புகள் முழுக்க முழுக்க பார்ப்பன ஆதிக்கம் நிறைந்ததாகவே தொடர்ந்து இருந்து வருகின்றன.

| | |
|---|---|
| மக்களவையில் பார்ப்பனர்கள் | 48 விழுக்காடு |
| மாநிலங்களவையில் பார்ப்பனர்கள் | 36 விழுக்காடு |
| இந்தியாவில் உள்ள ஆளுநர்கள் | |
| பார்ப்பனர்கள் | 50 விழுக்காடு |
| அமைச்சரவைச் செயலாளர்கள் | |
| பார்ப்பனர்கள் | 33 விழுக்காடு |
| கூடுதல் செயலாளர்கள் பார்ப்பனர்கள் | 62 விழுக்காடு |
| தனிச் செயலாளர்கள் பார்ப்பனர்கள் | 70 விழுக்காடு |
| பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் | |
| பார்ப்பனர்கள் | 51 விழுக்காடு |
| உச்சநீதிமன்ற நீதிபதிகள் பார்ப்பனர்கள் | 56 விழுக்காடு |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள் பார்ப்பனர்கள் | 40 விழுக்காடு |
| இந்தியத் தூதரக அலுவலர்கள் | |
| பார்ப்பனர்கள் | 41 விழுக்காடு |
| பொதுத்துறை நிறுவனங்களில் | |
| மத்திய அரசின் நிறுவனங்களில் | |
| பார்ப்பனர்கள் | 57 விழுக்காடு |
| மாநில அரசின் நிறுவனங்களில் | |
| பார்ப்பனர்கள் | 82 விழுக்காடு |
| வங்கிப்பணிகளில் பார்ப்பனர்கள் | 57 விழுக்காடு |
| விமானத்துறையில் பார்ப்பனர்கள் | 61 விழுக்காடு |
| அய்.ஏ.எஸ். அலுவலர்களில் பார்ப்பனர்கள் | 72 விழுக்காடு |
| அய்.பி.எஸ். அலுவலர்களில் பார்ப்பனர்கள் | 62 விழுக்காடு |

தொலைக்காட்சிக் கலைஞர்களில்

பாலிவுட் (மும்பைத் திரையுலகு) பார்ப்பனர்கள் 83 விழுக்காடு

சிபிஅய்/சுங்கவரித்துறை பணிகளில்

| | |
|---|---|
| பார்ப்பனர்கள் | 72 விழுக்காடு |
| வாட்ஸ்அப் குழுக்கள் நிர்வகிப்பவர்களில் | |
| பார்ப்பனர்கள் | 59 விழுக்காடு |
| முகநூல் நிர்வகிப்பவர்களில் பார்ப்பனர்கள் | 50 விழுக்காடு |

பார்ப்பனர் என்பதில்.....

பார்ப்பனர்கள் என்பதில் பெருமை கொள்வோம்!
இதுதான் பார்ப்பனர்களின் சக்தி!! இது
வாட்ஸ் அப் மூலம் பார்ப்பனர்களே உலவவிடும் தகவல்

குஷ்வந்சிங் ('Brahmins Power') தலைப்பில் 'சண்டே இதழ்' 23 - 29 டிசம்பர் 1980இல் இடம்பெற்றுள்ள பார்ப்பன ஆதிக்கம் பற்றிய தகவல்:-

| | |
|---|---|
| ஆளுநர்களில் 30 பேர் அதில் பார்ப்பனர்கள் | 13 பேர் |
| உச்சநீதிமன்ற நீதிபதிகள் 16 பேர் | |
| அதில் பார்ப்பனர்கள் | 9 பேர் |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள் 330 பேர் | |
| அதில் பார்ப்பனர்கள் | 166 பேர் |
| வெளிநாட்டுத் தூதர்கள் 140 பேர் | |
| அதில் பார்ப்பனர்கள் | 58 பேர் |
| பல்கலைகழகத் துணைவேந்தர்கள் 98 பேர் | |
| அதில் பார்ப்பனர்கள் | 50 பேர் |
| மாவட்ட நீதிபதிகள் 438 பேர் அதில் பார்ப்பனர்கள் | 250 பேர் |
| கலெக்டர் அய்.ஏ.எஸ். அதிகாரிகள் | 3,300 பேர் |
| அதில் பார்ப்பனர்கள் | 2,376 பேர் |

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 534 பேர்

அதில் பார்ப்பனர்கள் 190 பேர்

மாநிலங்களவை உறுப்பினர்கள் 244 பேர்


அதில் பார்ப்பனர்கள் 89 பேர்

'அனைவருக்கும் அனைத்தும்' என்ற உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு Brahminocracy என்ற 'சிஸ்டத்தை' முற்றாக மாற்றி அமைத்தால் மட்டுமே சாத்தியமாகும்.

## ஊன்றிப் படித்து உண்மையை உணர,சில நூல்கள்.....

# வகுப்புரிமை வரலாறு

ஆசிரியர் : கி.வீரமணி





அனைத்து துறைகளிலும் இடஒதுக்கீடு என்பது நீண்டகாலமாக மனுவின் அடிப்படையில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே என்று இருந்த அநீதியை எதிர்த்து ஆங்கிலேயர் ஆட்சி காலம் தொடங்கி இன்று வரை ஒரு உரிமை போராட்டமாய் முகிழ்த்து நிற்கும் வரலாற்றை பற்றிய சித்திரமே இந்நூல். ஓயாமல் உரிமைக்காக போராடுவதற்கான களத்தை பார்ப்பன மேலாதிக்கவாதிகள் உருவாக்கி வரும் சூழலில் நம் போராட்ட வழிமுறைகளை கூர்மைப்படுத்த ஒரு சிறந்த கையேடே இந்நூல்.

64 பக்கங்கள்

---

# வகுப்புவாரி உரிமையின் வரலாறும் பின்னணியும்

ஆசிரியர் : தந்தை பெரியார்





32 பக்கங்கள்

நீ அடிமையாக இரு என்று சொல்லும் துணிச்சலில்லாமல், நீ அடிமையாயிருக்க படைக்கப்பட்டிருக்கிறாய், கடவுளின் விருப்பச் செயல் இது என்று சமூகத்தின் பெரும்பான்மை மக்களினை சுரண்டி கொழுத்த பார்ப்பனர்களின் ஆதிக்க கட்டடங்களை கடப்பாரை கொண்டு தகர்த்த தந்தை பெரியாரின் வகுப்புவாரி உரிமை தொடர்பான சிந்தனை செல்வங்களின் சிறு தொகுப்பாய் இந்நூல்.

---

# வகுப்புவாரி உரிமை ஏன்?


ஆசிரியர் : தந்தை பெரியார்




“ஒவ்வொரு வகுப்பாருக்கும் இத்தனை உத்தியோகம்தான் என்று வரையறுத்துவிட வேண்டும், அந்த எண்ணிக்கைக்கு மேற்பட்டு எவராவது,எந்த வகுப்பினராவது ஓர் ஆள் அதிகமாக உத்தியோகம் பார்த்தால், அவர் மீது துராக்கிர ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டப்பட்டு அவனுக்கு வேலை கொடுத்தவனுக்கு நாணயக் குறைவுக் குற்றம் சாட்டியும் அதற்கு ஆன தண்டனை கொடுக்க வேண்டும். அப்போதுதான் அனைவரும் எல்லா வகுப்பினரும் சமநிலை எய்த முடியும்”. பெரியார், பெரம்பூரில் 12.8.1950 (இந்நூலிலிருந்து)

28 பக்கங்கள்

## ஊன்றிப் படித்து உண்மையை உணர,சில நூல்கள்.....




34 பக்கங்கள்


## 69 இட ஒதுக்கீட்டுக்கு முட்டுக்கட்டை எங்கே? பரிகாரம் என்ன?

ஆசிரியர் : **கி.வீரமணி**

4 கோடி ஒடுக்கப்பட்ட மக்களின் நலனை முன்வைத்து சிந்திக்கக் கூடாதா? என்ற கேள்வியோடு முடியும் இந்நூலில், 4 கோடி மக்களின் நலனை பேணும் 69% இடஒதுக்கீட்டிற்கு முட்டுக்கட்டையாக நின்ற நீதிமன்ற தீர்ப்பையும், அந்த முட்டுக்கட்டையை முறியடித்து 69% இடஒதுகீட்டை உறுதி செய்ய திராவிடர் கழகம் மேற்கொண்ட முயற்சிகளை குறித்து தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர்.

## கிரிமீலேயர் கூடாது ஏன்?

ஆசிரியர் : **கி.வீரமணி**





28 பக்கங்கள்

பல்லாண்டு காலமாக சாதியின் பெயரால் இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் உரிமைகளற்று வாட, பார்ப்பன சிறுபான்மை கூட்டம் அனைத்து துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி தமது வாழ்வையும், வளத்தையும் பெருக்கிக் கொண்டது. வஞ்சிக்கப்பட்ட மக்களின் உரிமை மீட்கும் ஒரு வழியை திறந்துவிட்ட மண்டல் குழு அறிக்கை, பலத்த சர்ச்சைகளுக்கு பிறகு 90களின் தொடக்கத்தில்தான் அமுலுக்கு வந்தது. இரண்டு பத்தாண்டுகளில் தனியார்மயமாக்கல், பன்னாட்டு நிறுவனங்களின் வரவு என்று பல தடைகள் குறுக்கே வர இட ஒதுக்கீட்டின் பலனை முழுமையாக பெரும்பான்மைச் சமூகம் அனுபவித்திராத சூழலில், இந்த குறுகிய கால கட்டத்திற்குகூட உரிமைகள் பகிர்ந்து கொள்ளப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாமல் வயிற்றெரிச்சலில் முன்வைக்கப்படும் வாதம்தான் **‘கிரீமிலேயர் வாதம்’**, இந்நூலை படித்து முடிக்கும் தருணத்தில் உங்கள் உள்ளத்தில் அய்யங்கள் சில இருந்திருந்தால் தகர்ந்து வீழும்படி இருக்கிறது ஆசிரியரின் இந்த தொகுப்பு.

## பெரியார் புத்தக நிலையம்

- பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
  வேப்பேரி, சென்னை -600 007. 044-26618163 :☎
- பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 0431-2771815 :☎



தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும், சமூகநீதியில் கைவைக்கும் துணிவு இல்லா சூழ்நிலை நிரந்தரமாக பாதுகாக்கப்பட்டது, கலங்கரை வெளிச்சம்போல மற்ற மாநிலங்களுக்கு இன்றும் அது வழிகாட்டியாக அமைந்துள்ளது. இதனால் இது **‘பெரியார் மண்’** என்று பீடுநடை போடுகிறது!

அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் (15(4)), அடுத்து 76 ஆவது திருத்தம், 93 ஆவது திருத்தம் என்று மூன்று அரசமைப்பு சட்டத் திருத்தங்கள் திராவிடர் இயக்கத்தின் முப்பெரும் சாதனைகளாகும்!

தேர்தலில் ஈடுபடாத, சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்குச் செல்லாத ஓர் இயக்கம் சமூகநீதியில், இத்தகைய சாதனைகளைப் படைத்தது என்பது ஓர் அதிசயமே!

9 997720 146082